1979 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் ; மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட காரணம் சரியாக இருக்குமானால், நான் நெறியாளரை நேரில் அனுப்பி, அது உண்மை என்று அவர்களிடமிருந்து அறிக்கை வருமானால், அந்த இடத்திலேயே அவர்களுக்குப் பட்டா போட்டுத் தர அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

நடுவச்சேரி அரிசனக் குடியிருப்புக்கு குடிநீர் வழங்கல்.

*வினா எண். 770—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அவினாசி தாலுக்கா நடுவச்சேரி அரிசன மக்கள் குடி தண்ணீர் கிணறு வேண்டுமென 21-3-79 முதல் உண்ணா விரதம் இருக்க முடிவு செய்திருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் :

(அ) உண்ணாவிரதம் எதுவும் நடக்கவில்லை.

(ஆ) அவினாசி வட்டம், நடுவச்சேரி அரிசன மக்களுக்கு குடிநீர் வசதிக்காக ரூ. 30,000 செலவு மதிப்பீட்டில் ஒரு கிணறு வெட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி தாலுக்கா நடுவச்சேரி அரிசன மக்கள் 21-3-79 அன்று உண்ணாவிரதம் இருப்பதாக அறிவித்து இருந்தார்கள். சுதந்திரம் வந்த 32 ஆண்டுகாலத்திற்குப் பிறகும். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கம் வேண்டாம். சுதந்திரம் வந்தது எப்போது என்பது எல்லோருக்கும் தெரியும். நீங்கள் கேள்வியை ஆரம்பிக்கிறபோதே 5 நிமிடம் எடுத்துக் கொள்வீர்கள் போல் தெரிகிறது. சுருக்கமாகத் துணைக் கேள்வி போடுங்கள்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, சுதந்திரம் வந்த 32 வருஷத்திற்குப் பிறகும் குடிநீர் கேட்டு உண்ணாவிரதம் இருக்க வேண்டிய இந்த அவல நிலையைப் போக்க, அரிசன மக்கள் வாழும் காலனிகள் எல்லாவற்றிலும் குடிநீர் வழங்க சிறப்புத் திட்டம் போட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்தத் துறையைப் பொறுத்தவரையில் ஒதுக்குகிற நிதியை வைத்துக் கொண்டுதான் சில பல கிராமங்களுக்கு குடி நீர் வசதி செய்து தர முடிகிறது. இங்கே இருக்கிற பிரச்னை

[1979 ஏப்ரல் 21

என்னவென்றால் ஊராட்சி மன்றம், ஒன்றியம் போன்றவைகளும் எல்லா மக்களுக்கும் குடிநீர் வசதி செய்து தரக் கடமைப்பட்டு இருக்கிறது. அதேபோல் குடிநீர் வடிகால் வாரியமும் அதைச் செய்து வருகிறது. ஆகவே தான் இது போன்ற பணிக்கு தனி நிதி ஒதுக்குவதற்கு தற்போது போதுமான நிதி வசதி இல்லை.

திரு. க. மருதாசலம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவினாசி தாலுக்கா, நடுவச்சேரி கிராமத்திற்கு குடிநீர் வசதிக்காக ரூ. 30,000 ஒதுக்கியிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதனை விரைவாகச் செய்வதற்கு அரசு முயற்சிகளை எடுக்குமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல், நிதி ஒதுக்கவில்லை. மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

[முற்பகல் 9-50]

திரு. சொ. ந. பழனிச்சாமி: பேரவைத் தலைவரவர்களே, நடுவச்சேரி அரிசன மக்கள் குடிநீர்ப் பிரச்சினை பற்றி நான் ஏற்கெனவே கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்திருந்தேன். ஆனால் நம்முடைய மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. இருந்த போதிலும் இப்போது நம்முடைய மாண்புமிகு அம்பிகாபதி கேட்ட கேள்விக்கு நன்றி தெரிவிப்பதுடன்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பழனிச்சாமி அவர்கள் நேரடியாக பேரவைத்தலைவர் மீது குற்றச்சாட்டுகளை எழுப்பி கேள்வி கேட்கக் கூடாது. அதை எல்லாம் என்னுடைய அறையிலே வந்து கேளுங்கள்.

திரு. சொ. ந. பழனிச்சாமி: தலைவரவர்களே, அரசு இது போன்ற பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுத்துச் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் சேவூர் பக்கம் ஓச்சம்பாளையம் அரிசனக் காலனியில் சுமார் 25 ஆயிரம் ரூபாய் செலவில் ஆழ் குழாய் கிணறு அமைத்திருக்கிறார்கள். அதையும் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது நடுவச்சேரி அரிசன மக்கள் பற்றிய பிரச்சினை. ஆகவே அதைப்பற்றி மட்டும்தான் கேட்க வேண்டும். உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, நடுவச்சேரி குடிதண்ணீர் பிரச்சினை அரசின் கவனத்தில் இருக்கிறது. துரிதமாக அந்தப் பணியை முடிப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1979 ஏப்ரல் 21]

திரு. மு. ஆறுமுகம்: தலைவரவர்களே, அவினாசித் தாலுக்காவில் மட்டும் இந்தப் பிரச்சினை என்பது கிடையாது. தமிழ்நாடு எங்கும் உள்ள அரிசன மக்கள் தண்ணீருக்காக கண்ணீர் விடுகிறார்கள் என்பதை அரசு அறியுமா, இன்றைக்கு சேலம் மாவட்டத்தில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தாங்கள் ஒரு கட்சியின் தலைவர். நடுவச்சேரி பிரச்சினை நடந்து கொண்டிருக்கும்போது சேலத்திற்குப் போகிறீர்களே.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரிசன மக்களுக்குப் போதுமான நிதி ஒதுக்கப்பட வில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆகவே மேலும் நிதி ஒதுக்கப்பட்டு இந்த நடுவச்சேரி திட்டத்திற்கு வரை படம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் சொல்கிறார்கள். தண்ணீர் எப்போது கிடைக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, அதற்கென்று மதிப்பீடு தயாரித்து அனுப்பி இருக் கிறார்கள். அது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. அரசு ஆணையிட்ட பின் கிணறு வெட்டித் தண்ணீர் கொடுக்கப் படும்.

கரும்புக்கு விலை

*வினா எண் 771—திரு. என் கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா.

(அ) கரும்புக்கு ஓர் ஆதாயமான விலை நிர்ணயிக்கக் கோரி மாநில அரசு, வேளாண்மை விளைபொருள் விலைகள் குறித்த ஆணைக் குழுவிடமும், மத்திய அரசினிடமும் பரிவுரை செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) இவ்வரசு 8.5 சதவீத சர்க்கரை கட்டுமானம் உள்ள கரும்பிற்கு டன் ஒன்றிற்கு ரூ. 125 விலையாக நிர்ணயிக்க வேண்டும் என மைய அரசினிடமும், வேளாண்மை விளை பொருள்களின் விலைகளை நிர்ணயிக்கும் குழுவினிடமும் 78 ஜூலைத் திங்களில் பரிந்துரைத்தது. மேலும், 0·1 சதவீதம் அதிகமான சர்க்கரை கட்டுமானம் கிடைத்தால் டன் ஒன்றிற்கு ரூ. 1 கூடுதலாக அளிக்க வேண்டும் எனவும் பரிந்துரைக்கப் பட்டது.